முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1257

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.03.2023**, வியாழக்கிழமை

1. சிவராஜஞானியே அரங்கா வாழ்க
   சித்திதரும் தவசியே தேசிகா வாழ்க
   அவதாரம் என் சொரூபமாக எடுத்து
   அகிலத்தைக் காக்கின்ற குருராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும் இனிதே
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 25 ம் நாள், 09.03.2023, வியாழக்கிழமை)
   தாழ்விலா அரங்கன் மார்க்கமே உலகினில்
   தழைத்தோங்கும் ஞானவான்கள்தனை படைத்து
3. படைத்துமே உலகமெங்கும் ஜீவதயவு பண்புகள் மக்களிடை சிறந்தோங்கி
   தடையற அனைவரும் ஞானவான்களாக தக்கபடி வழிநடத்தி சிறப்புகாணும்
   காணவே அரங்கமகான் புண்ணியத்தை
   கருணைகொண்டு எவரெல்லாம் ஏற்று வழிநடத்தி
4. நடத்தியே தர்மபலம் கூட்டுகின்றாரோ
   ஞாலமதில் அவர்களெல்லாம் ஞானிகளாகி
   இடரின்றி இந்த உலகில் வாழ்வை நடத்தி
   எல்லோர்க்கும் அந்த ஞானம் கிட்டும் வண்ணம்
5. வண்ணமுடன் சேவையாற்றி அவரவரும்
   வாழும் காலமே ஞானிகளாகி உயர்ந்து நிற்பர்
   எண்ணமெல்லாம் அரங்கன் நாமஜெபம்நிற்க
   இவர்களைக்கொண்டே ஆறுமுகன்யான் உலகமாற்றம் புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–